DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM

**C.C.No. 387/2024**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW1 | Caste | : | |
| Name | : | செல்வி | Age | : | 42 |
| H/N | : | சீனிசேகர் | Occupation | : | கூலிவேலை |
| Village | : | சீனியப்ப தர்ஹா | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 19th day of February 2025.

**19.02.2025**

**(எதிரி ஆஜர்.).**

**முதல் விசாரணை**

நான் இராமநாதபுரம் மாவட்டம் சீனியப்ப தர்ஹாவில் குடியிருந்து கொண்டு கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அவர் எங்கள் ஊரை சேர்ந்தவர். கடந்த 06.06.2024ம் தேதி மதியம் சுமார் 02.30 மணியளவில் நான் அரியமான் பீச்சில் கடை போட்டு வியாபாரம் செய்து கொண்டிருந்தபோது தேவிடியா ஊர் விட்டு ஊர் வந்து வியாபாரம் செய்துகொண்டிருக்கிறாள் என்று ஆஜர் எதிரி என்னை அசிங்கமாக திட்டினார். அதன்பிறகு அடுப்பில் தீயில் எறிந்துகொண்டிருந்த விறகு கட்டையை எடுத்து எனது தலையில் அடித்து காயத்தை ஏற்படுத்தினார். அங்கிருந்த சூரியகாந்தி மற்றும் முத்துலெட்சுமி என்னை இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். அதன்பிறகு உச்சிப்புளி காவல்நிலையம் சென்று புகார் மனு கொடுத்தேன். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார்மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **(புகார் மனு அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

**(குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை).**

**மறுவிசாரணை– இல்லை**

PRABHAKARAN G
Digitally signed by PRABHAKARAN G
Date: 2025.02.19 13:18:31 +0530

**நீதித்துறை நடுவர் எண்.2**
**இராமநாதபுரம்**

DEPOSITION OF THE WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,

RAMANATHAPURAM

**C.C.No. 387/2024**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW2 | Caste | : | |
| Name | : | சூரியகாந்தி | Age | : | 50 |
| H/N | : | ஆறுமுகம் | Occupation | : | வியாபாரம் |
| Village | : | அரியமான் | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 19th day of February 2025.

**19.02.2025**

**(எதிரி ஆஜர்.).**

**முதல் விசாரணை**

நான் இராமநாதபுரம் மாவட்டம் அரியமானில் குடியிருந்து கொண்டு வியாபாரம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 06.06.2024 ம் தேதி மதியம் சுமார் 02.30 மணியவில் நான், முத்துலெட்சுமி, அ.சா.1 ஆகிய மூவரும் அரியமான் பீச்சில் கடை போட்டு வியாபாரம் செய்துகொண்டிருந்தோம். அங்கு ஆஜர் எதிரியும் கடை போட்டிருந்தார். அப்போது ஆஜர் எதிரி அ.சா.1 யை பார்த்து ஊர்விட்டு ஊர் வந்து கடை போடுறியே தேவிடியா என அசிங்கமாக திட்டினார். அதன்பிறகு அடுப்பில் இருந்த விறகு கட்டையை எடுத்து அ.சா.1 ன் தலையில் ஆஜர் எதிரி அடித்துவிட்டார். அதன்பிறகு அ.சா.1 யை நானும், முத்துலெட்சுமியும் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். பிறகு அ.சா.1 உச்சிப்புளி போலீசாரிடம் புகார்மனு கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

**(குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை).**

**மறுவிசாரணை– இல்லை**

PRABHAKARAN G

Digitally signed by PRABHAKARAN G
Date: 2025.02.19 13:18:40 +0530

**நீதித்துறை நடுவர் எண்.2**

**இராமநாதபுரம்**

DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM
**C.C.No. 387/2024**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW3 | Caste | : | |
| Name | : | முத்துலெட்சுமி | Age | : | 38 |
| H/N | : | பொன்னுச்சாமி | Occupation | : | வியாபாரம் |
| Village | : | அரியமான் | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 19th day of February 2025.

**19.02.2025**

**(எதிரி ஆஜர்.).**

**முதல் விசாரணை**

நான் இராமநாதபுரம் மாவட்டம் அரியமானில் குடியிருந்து கொண்டு வியாபாரம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 06.06.2024ம் தேதி மதியம் சுமார் 02.30 மணியவில் ஆஜர் எதிரி அ.சா.1யை பார்த்து தேவிடியா என அசிங்கமான வார்த்தையால் திட்டினார். பிறகு அடுப்பில் இருந்த விறகு கட்டையை எடுத்து அ.சா.1ன் தலையில் ஆஜர் எதிரி அடித்தார். நானும், அ.சா.2ம் அ.சா.1யை இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். பிறகு உச்சிப்புளி காவல்நிலையம் சென்று அ.சா.1 புகார்மனு கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

**(குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை).**

**மறுவிசாரணை– இல்லை**

PRABHAKARAN G

Digitally signed by PRABHAKARAN G
Date: 2025.02.19 13:18:49 +0530

**நீதித்துறை நடுவர் எண்.2**
**இராமநாதபுரம்**